# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2104/5 - 2018 දෙසැම්බර් මස 31 වැනි සඳුදා - 2018.12.31

*2104/5 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம், மேற்குறித்த பிரிவின் கீழ் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதிய 1947/45 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய 1465/19 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளை 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இதனகத்துப் பின்னர் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதிய 2091/3 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்கீழ் வெளியிடப்பட்ட கட்டளையானது 2019, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இரத்துச்செய்யப்படுகிறது எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, திசெம்பர் 31.

## அட்டவணை

1465/19 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட அட்டவணையிலுள்ள 04 ஆம் விடயத்திற்கு (திருத்தியமைக்கப்பட்டவாறு) பதிலாக, பின்வரும் 04 ஆம் விடயத்தினைப் பதிலீடு செய்வதன் மூலம் மேலும் திருத்தியமைக்கப் படுகிறது :-

| | | | | |
|---|---|---|---|---|
| "04. | (அ) | | மதுபான விற்பனையில் ஈடுபட்டுள்ள வர்த்தக அல்லது வியாபாரமொன்று நீங்கலாக, ஏனைய பிற வியாபாரம், வர்த்தகம், உயர் தொழில் வாய்மை அல்லது தொழிலொன்றினை மேற்கொண்டு நடாத்திச் செல்வதற்காக (அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) ஏதேனும் காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்று | ரூபா 2,000.00 அல்லது அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் 10%. இதில் எப்பெறுமதி குறைந்ததோ அப்பெறுமதி |
| | (ஆ) | (i) | வெளிநாட்டு மதுபான (FL) அனுமதிப்பத்திரங்களோடு இணைத்து வழங்கப்படுகின்ற AFL1, AFL2, AFL3, AFL4 சாராய அனுமதிப்பத்திரம் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளினை விற்பனை செய்வதற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் நீங்கலாக மதுபான விற்பனையில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வர்த்தக அல்லது வியாபாரமொன்றினை மேற்கொண்டு நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் காலப்பகுதிக்காக உரிமையாளருக்கு வழங்கப் பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்று, | ரூபா 20,000.00 |
| | | (ii) | வெளிநாட்டு மதுபான (FL) அனுமதிப்பத்திரங்களோடு இணைத்து வழங்கப்படுகின்ற AFL1, AFL2, AFL3, AFL4 சாராய அனுமதிப்பத்திரம் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளினை விற்பனை செய்வதற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம். | அனுமதிப்பத்திரமொன்றுக்கு ரூபா 2,000.00 அல்லது அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் 10%. இதில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி" |

01-331

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.